**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C.No.96/2021 PW 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | தினேஷ்கனிகா | தந்தை/கணவர் பெயர்: | |
| ஊர் : | | தாலுகா : | |
| வயது : | | தொழில் : | மருத்துவர் |
| ஜாதி : | | சமயம் : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.08.2026

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**<u>21.08.2026முதல் விசாரணை</u>**:

நான் தற்போது சென்னை அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் முதுநிலை மருத்துவ படிப்பு படித்து வருகிறேன். கடந்த 06.07.2021 -ம் தேதி இரவு 08.00 மணியளவில் நான் சிங்கம்புணரி அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக பணியிலிருந்த போது பாலசுப்பிரமணியன் வயது 56, த/பெ. அய்யாக்கன்னு என்பவர் அன்றைய தினம் இரவு 07.30 மணியளவில் அண்ணாநகர், பிள்ளையார் கோவில், சூரக்குடி அருகே தான் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது அடையாளம் தெரிந்த ஒரு நபர் கட்டைக்குச்சியால் தனது முகத்தில் அடித்து காயப்படுத்தியாக சிகிச்சைக்கு வந்தார். அவரை பரிசோதனை செய்து 3x2x1செ.மீ அளவிலான வெட்டுக்காயம் உதட்டில் காணப்பட்டது. அவருக்கு பல் உடைந்து இரத்தம் வந்தது. மேலும், இடது முட்டி அருகே வீக்கம் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கி மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்க சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு மேற்படி நபருக்கு அல்லனா எலும்பு முறிவானது. கொடுங்காயம் என்று காயச்சான்று வழங்கப்பட்டதன் அடிப்படையில் பாலசுப்பிரமணியன் விபத்து பதிவேட்டில் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கினேன். **விபத்து பதிவேடு அ.த.சா.ஆ.3** ஆகவும், **காயச்சான்று அ.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக என்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

காயம்பட்ட நபர் பாலசுப்பிரமணியன் பிள்ளையார் கோவில் அருகே தான் தாக்கப்பட்டதாக என்னிடம் கூறினார். சிவகங்கை அரசு மருத்துவமனையில் எவ்வகையான சிகிச்சை வழங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நுண்கதிர் படங்கள் மற்றும் சி.டி ஸ்கேன் எதையும் நான் பார்க்கவில்லை. சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவர் கொடுத்த அறிக்கையின் படி நான் கருத்துரை வழங்கினேன். சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவர் காயச்சான்று மட்டும் வழங்கியுள்ளார் என்றால், சரிதான். பொதுவாக இருட்டான நேரத்தில் பள்ளம், மேடு உள்ள ரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்று கீழே தடுமாறி விழுந்தால், மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்ட வாய்ப்புள்ளது என்றால், முட்டியில் உள்ள காயத்திற்கு வாய்ப்புள்ளது. முகத்தில் அவ்வாறு காயம் ஏற்பட வாய்ப்பில்லை. 3x2x1 செ.மீ அளவிலான வெட்டுக்காயம் உதட்டில் காணப்பட்டது. அவருக்கு பல் உடைந்ததான காயமானது இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழும் போது கண்ணாடி, கூர்மையான கல் போன்றவை குத்தி ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால், உள்ளது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-xxxx
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.